For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

நான்கு  Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

தகரப் பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒளி இல்லம்"

210, பிரதான வீதி, (யாகப்பர் ஆலய மருங்கில்) யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 80

# சமாதான யோசனை எதுவாயினும் பிரபாவிடம் இருந்தே வர வேண்டும்!

## பிரதமர் ரணில் அறிவிப்பு; ஆரியரத்னா முயற்சி தோல்வி?

கொழும்பு, பெப்ரவரி 15

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான யோசனை எதுவானாலும், விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனிடம் இருந்தே வரவேண்டும்.

விடுதலைப் புலிகளின் ஏனைய தலைவர்களிடம் இருந்துவரும் சமாதான யோசனையை நாம் ஏற்பதற்கு இல்லை.

—இவ்வாறு கூறி – சர்வோதய தலைவர் கலாநிதி ஆரியரத்னா விடம் விடுதலைப் புலிகள் தெரிவித்த சமாதான யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துவிட்டார்.

தென்பகுதியில் நடந்த பேரணியில் கலந்துகொண்டு பேசுகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

அவரின் பேச்சு, சர்வோதயத்தலைவரின் சமாதான முயற்சி தோல்வியடைந்துவிட்டதையே காட்டுகின்றது என்று அவதானிகள் தெரிவித்தனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பிரபாகரனைச் சந்திக்க ஆரியரத்னா வருவாராம்

கொழும்பு, பெப். 15

விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வெகு விரைவில் தாம் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாக சர்வோதய தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்னா தெரிவித்தார்.

கொழும்பு சிங்கள நாளிதழ் 'லங்காதீப'வுக்கு அளித்த பேட்டியில் டாக்டர் ஆரியரத்னா இத்தகவலை வெளியிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். சென்று திரும்பிய பின்னர் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்து நிலைவரத்தை விளக்கப்படுத்திய சூழ்நிலையில் டாக்டர் ஆரியரத்னா தாம் மீண்டும் யாழ் செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளார். (உ-6)

## ராணுவ நடவடிக்கை திருமலையில் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 15

இந்த ஆண்டின் முதலாவது இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்கா இராணுவம் நேற்று முன்தினம் ஆரம்பித்ததாக அறிவிக்கப்படுகிறது.

"வேலு சுமண" என்ற பெயரில் திருகோணமலைக் காடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையில் கடற்படை மற்றும் விமானப்படை உதவியுடன் சுமார் ஆயிரம் துருப்புகள் வரை ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களைக் குழப்ப விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தக் கூடும் என இராணுவம் அஞ்சுவதால்—

முந்திக் கொண்டு தாக்குதல் நடத்தும் திட்டமாக இந்த நடவடிக்கையை அரச தரப்பு ஆரம்பித்திருப்பதாகவும் கருதப்படுகிறது. (உ-எ-க-3)

## பருத்தித்துறை-திருமலை படகுச் சேவை ஏப்ரலில்!

யாழ்ப்பாணம், பெப். 15

திருகோணமலைக்கும்—பருத்தித்துறைக்கும் இடையில் படகுச் சேவை ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏப்ரல் மாதம் முதல் நடத்தவிருக்கிறது.

இச்சேவையை நடத்துவதற்கு தேவையான படகு ஒன்றை அயர்லாந்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பெறவிருப்பதாக குழுவின் யாழ். அலுவலக அதிகாரி திரு. செற்றிக் பிரலா தெரிவித்தார்.

ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் நடத்தப்பட்ட 'குமண' கப்பல் சேவைக்குப் பதிலாகவே இப்படகு சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கிறது.

மனிதாபிமான சேவையாக அவசர பொருள்களை எடுத்து வரவும்—

அவசர நோயாளர்களை அழைத்துச் செல்லவும்—

இச்சேவை பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கற்பிட்டிக் கடலில் மீன்பிடிக்கத் தடை!

கொழும்பு, பெப். 15

கற்பிட்டியில் இருந்து மீன்பிடிப்பதற்குக் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் விடுதலைப் புலிகளுக்கு டீசலையும் தடைசெய்யப்பட்ட பிறபொருள்களையும் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர் என்று மேற்குப்பிராந்திய கடற்படைப் பொறுப்பு அதிகாரி கொமடோர் ஏ. எம். எஸ். ராஸிக் தெரிவித்திருக்கிறார்.

கற்பிட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதற்குக் காரணம், டீசல் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருள்களின் வியாபாரமேயென வெளியான தகவலைத் தொடர்ந்தே, கற்பிட்டிக் கடற்பிரதேசத்தையும் தடைசெய்யப்பட்ட பகுதியாகப் பிரகடனம் செய்யவேண்டியேற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ-6)

## மட்டு. சிறைகளில் உள்ள தமிழர்கள் கொழும்புக்கு!

### உறவினர்கள் அங்கலாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

ஸ்ரீலங்காப் படையினரால் பிடிக்கப்பட்டு மட்டக்களப்பில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் அவசரம் அவசரமாக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவர்களைப் பார்க்க மட்டக்களப்பு சிறைச்சாலைக்குத் திரண்டு செல்லும் மக்கள் இங்கு எவரும் இல்லை என்று கூறி அரசபடைகளாலும் பொலீஸாரினாலும் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

சிறையில் உள்ளவர்களை சந்திப்பதாயின் அதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்றும் — மக்களுக்குக் கூறப்படுகின்றது.

இதுவரை 300க்கு மேற்பட்ட தமிழர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் இவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அங்கலாய்க்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## ஆஸ்பத்திரி வலயம் மீது இனி ஷெல் தாக்குதல் இடம்பெறாது

### ஜனாதிபதி, இராணுவத்தளபதி உறுதிமொழி

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயப்பகுதியில் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல் இனி நடத்தப்படமாட்டாது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவும் உத்தரவாதம் அளித்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். அலுவலக அதிகாரி திரு. செற்றிக் பிரலா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயப் பகுதியில் அவ்வப்போது தாக்குதல்கள் இடம்பெற்று வந்ததும்—

அதுபற்றி அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட சமயங்களில் இனிமேல் அப்படி நடக்காது என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டு வந்ததும் தெரிந்ததல்லவே.

ஆனால் இத்தடவை இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி ஆகியோருக்கு தமது அமைப்பு அழுத்தம் கொடுத்ததாகவும்—

அப்போது பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசுக்கும் தமது அமைப்புக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட முன்னைய உடன்பாட்டின்படி நடக்க உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

இனிமேல் அப்படி ஏதாவது தாக்குதல் நடக்கும் பட்சத்தில் ஷெல் வரும் திசை பற்றிய விவரத்தை தெரிவிக்குமாறும் அரச தரப்பில் கேட்கப்பட்டுள்ளதாம். (உ-3)

## பருத்தித்துறையில் தாக்குதல்: கடற்படை நிறுத்த வேண்டும்

### பலாலிமாநாட்டில் செஞ். அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 15

"பருத்தித்துறையில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்க வசதியாக, அப்பகுதியில் கடற்படையினரின் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்".

— இவ்வாறான கோரிக்கையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி திரு. செற்றிக் பிரலா வட பிராந்திய படை அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பலாலியில் நடந்த கூட்டத்தில் தாம் இக்கருத்தை வலியுறுத்திக் கூறியதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வட பிராந்திய தளபதி, கடற்படைத் தளபதி உட்பட பல படை அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில் திரு. செற்றிக் பிரலா சமர்ப்பித்த கோரிக்கைகள் வருமாறு:-

★ பருத்தித்துறையில் பொருள்கள் இறக்க வசதியாக கடற்படையினரின் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

★ கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை உடனடியாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்க வசதி செய்ய வேண்டும்.

★ யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம் தொடர்பாக செய்யப்பட்ட உடன்பாட்டின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு என்ட [illegible] உவையின்ரை [illegible] யள்......!

## ஆயர் கெனத்தின் உயிருக்கு ஆபத்து!

### அவரே வெளியிட்ட தகவல்

தென் பகுதியில் தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமாதான முயற்சியை மேற்கொண்டு தாம் வட பகுதிக்கு வந்து போனதே இதற்குக் காரணம் என்று ஆயர் பெர்னாண்டோ உதயனுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார்.

தமிழர்களினால் தமது உயிருக்கு ஆபத்து வராது என்றும் அவர் சொன்னார்.

உயிராபத்துக்கு மத்தியிலும் தாம் சமாதான முயற்சியை தொடரப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயர் கெனத்தும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் வண. இங்ஙிலி முத்தையாவும் நேற்று பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குப் புறப்பட்டுச் சென்றனர். பின்னர் பலாலியிலிருந்து அவர்கள் விமானத்தில் கொழும்பு சென்றனராம். (உ-எ-3-173)

## செய்திச் சாரம்

### இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப். 15

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [உ-3]

### பல்கலை. ராகிங்: 24 மாணவர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 15

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புதிய மாணவர்களைத் துன்புறுத்தும்(ராகிங்) செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 24 சிரேஷ்ட மாணவர்கள் உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

### ஜனாதிபதி மாளிகையில் இரத்தினக்கல் களவு

கொழும்பு, பெப். 15

ஜனாதிபதி மாளிகையில் புத்தர் சிலையில் காணப்பட்ட விலை மதிக்கப்படமுடியாத இரத்தினக்கல் ஒன்று காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி விசேட பொலீஸ்கோஷ்டி ஒன்று புலன் விசாரணை நடத்தி வருவதாக பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா தெரிவித்தார்.

டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு, ஜனாதிபதி மாளிகைக்குச் செல்வதற்கு முன்னரே களவு இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. (உ-எ-6)

### பென்ஷன் வவுச்சர் ருகுணுவில் வந்தது

யாழ்ப்பாணம், பெப். 15

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'ருகுணு' கப்பலில் யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாத வவுச்சர்களும் வந்து சேர்ந்தன.

உரம் மற்றும் யாழ் செயலக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டன. (உ 3-5-173-162)

### கல்முனையில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 15

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூநகரி கலமுனைப் பகுதியை சியாமாச்செட்டி விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

அதற்கு முன்னர் காலை 9 மணியளவில் அரியாலை பூம்புகார் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-51-162)

### தமிழர் அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், பெப். 15

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் கடந்த புதனன்று ஸ்ரீலங்கா பொலீஸாரால் தமிழர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் பலத்த தாக்குதலுக்கு உள்ளானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பெரியதம்பி இராஜதுரை என்ற குடும்பஸ்தரே கடுமையான சித்திரவதையின் பின்னர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இறந்தவரின் சகோதரர் செல்வா என்பவரே தாக்குதலில் பலத்த காயமடைந்தார். (உ-3)

### பலாலி ஷெல்கள் வடமராட்சியில்

வடமராட்சி, பெப். 15

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 5 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு திக்கத்திலும் ஒன்று பொலிகண்டி, ஆலடிப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன. சிலவீடுகள் பயன்தரு மரங்கள் சேதமடைந்தன. (உ-173-15)

### கொழும்பில் 30 தமிழர் கைது

கொழும்பு, பெப். 15

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் கடந்த செவ்வாய் இரவு 8 மணிமுதல் 12 மணி வரை பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது 30 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (உ-3)

### தமிழ் அதிகாரி தாக்கப்பட்டார்

கொழும்பு, பெப். 15

வட கொழும்பு மருத்துவக் கல்லூரியின் தகுதிவாய்ந்த அதிகாரியான திரு. ஏ. விசுவநாதனை களனி பல்கலைக்கழக மாணவர் சிலர் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொழும்புப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்ட இடைக்காலத் தடை உத்தரவை அடுத்து இத்தாக்குதல் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை களனி பல்கலைக்கழக உபவேந்தரான பேராசிரியர் கே. தர்மதாஸா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல மாணவர்கள் தம்மையும் எச்சரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-எ-6)

### நரோமா இன்று வந்து திரும்பும்

யாழ்ப்பாணம், பெப். 15

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் 'நரோமா' கப்பல் இன்று காலை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை 'நரோமா' கப்பல் மூலம் திருமலை செல்வதற்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ள பயணிகள் அனைவரையும் இன்று நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-3-5)

### புதிய எம். பி.

ஸ்ரீ. ல. சு. கவின் தேசியப் பட்டியல் எம். பியாக இருந்து அண்மையில் காலமான ரி. டபிள்யூ. ராஜரத்தினத்தின் இடத்துக்கு சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ. எல். எம். சம்சுதீன் எம். பியாக நியமிக்கப்பட்டுள்ளார். (உ-எ)

### தபால் அனுப்ப ஏற்பாடு

பருத்தித்துறையில் தற்சமயம் பொருள் இறக்கிக் கொண்டிருக்கும் 'மாஹோர' கப்பல் ஓரிரு தினங்களில் கொழும்பு திரும்பவிருக்கிறது.

இக்கப்பலில் தபால் பொதிகள் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

உடன் தபால்களை பெட்டிகளில் சேர்க்குமாறும் தபால் பகுதியினர் கேட்டுள்ளனர். [உ-162]

### கொழும்பு மேயர் மீதான விசாரணை

கொழும்பு, பெப். 15

கொழும்பு மேயர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள திரு. ரட்ணசிறி ராஜபக்ஷாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஐந்து குற்றச்சாட்டுகள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணை நேற்று கொழும்பு செயலகத்தில் ஆரம்பமானது. (உ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றது

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 30 பயிற்சிகள் (கணிதம், தமிழ்) மீட்டல் கேத்திரகணிதம், ஆள்கூற்று கேத்திர கணிதம் OMO'S English 1,2,3,4 கிடைக்குமிடம்: ஸ்ரீலங்காப் புத்தகசாலை, 234, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (சி-7332)

### மீன்தொட்டி

3 அடி நீளம், 1½ அடி அகலம், உயரம் கொண்ட தடித்த ஐந்து பக்க கண்ணாடித் தொட்டி மேல்க் கவரயுடன் உண்டு. 240V Japan Air Pump, நீர் வெளியேற்றி சுத்திகரிக்கும் அழகிய பல உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு. வைத்தீஸ்வரன் முருகன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலைக்கு முன். (6965)

### சனி பெயர்ச்சி

சனி பகவான் 11-2-94 முதல் 23-4-94 வரை 12 ராசிகளுக்கும் ஒரே புத்தகம் விலை 20/- கணிப்பு: எஸ். வெங்கடராமய்யங்கார், தியாகநகர், சென்னை. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7235)

### TUITION (கணிதம்)

ஆண்டு 9, 10, 11 கணிதம் சிறந்த பெறுபேறடைய கற்பிக்கப்படும். தனிப்பட வீடுகளிற்கு வந்தும் கற்பிக்கப்படும். O/Lஇல் சித்தி பெறத் தவறியோர்க்கு முன்னுரிமை. N. K. குகநேசன், உரும்பிராய் தெற்கு. (6960)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு. கஜன்ஸ் வாச் வேக்ஸ், இல: 12, ஸ்ரேசன் வீதி, (சந்திக்கு அருகில்), சுன்னாகம். (6967)

### மணமகள் தேவை

யாழ். இந்து 31 வயது, திருவாதிரை நட்சத்திரம் உயர்ந்த அழகிய சுவிட்சர்லாந்தில் வேலைபார்க்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வாலிபருக்கு உள்ளூரிலோ/வெளியூரிலோ மணமகள் தேவை. கத்தோலிக்க 43 வயது யாழ். அரசாங்க உத்தியோகத்தருக்கும் மணமகள் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 610 C/o உதயன், யாழ்ப்பாணம். (29442)

### தேவை

தகரப் பந்தல் விற்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். முகவரி: அம்பாள் வீடியோ சென்ரர், 894, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (29433)

## பூநகரிச் சமர் வீடியோ நாடா

யாழ்ப்பாணம், பெப் 15 "ஒப்பரேசன் தவளை" பூநகரிச் சமரின் வீடியோ நாடா இன்று 15ஆம் திகதி வெளிவரவுளளது என்று விடுதலைப் புலிகளின் நிதர்சனம் பிரிவு அறிவித்துள்ளது. (க)

## தேவை

அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் கீழ்க்கண்ட வேலைகளுக்கு நேரில் சமுகம் தரவும்,

1. விற்பனையாளர்கள்
2. கணக்குப்பதிவாளர்
3. விற்பனை உதவியாளர்
4. உதவியாளர்

அனுபவம், திறமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும். இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.

வேலை நாட்களில் 12-30 — 2-30 மணிவரைக்கும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
புதிய இலக்கம் 234.
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(சி-7234)

அரசினர் போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

### அமைய கணக்குப் பதிவாளர்
### CASUAL BOOK-KEEPER

இவ்வைத்தியசாலையில் வெற்றிடமாக உள்ள மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. க. பொ. த. (சா/த) பரீட்சையில் அல்லது க. பொ. த. பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, கணிதம் / எண்கணிதம் / வர்த்தக கணிதம் ஆகிய பாடங்களுட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்குப் பதிவியல் பயிற்சி நெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (Book-Keepink Course)
3. 28 - 02 - 1994 இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 28-02-94 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் என்னால் அறிவிக்கப்படும் ஒரு திகதியில் எனது பணிமனையில் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவருக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சம்பள விகிதப்படி வேதனமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்,
டாக்டர் (செல்வி) என். கனகரெட்ணம்,
[சி-7334]

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடத்தும்
தையல், தட்டச்சு பயிற்சி நிதிக்கான

## இரண்டு நாள் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

காலம்: **19 - 02 - 94, 20 - 02 - 94** காலை 8 00 தொடக்கம் 12-00 மணிவரை. மாலை 2·00 தொடக்கம் 5·00 மணிவரை

ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள்

| | | |
|---|---|---|
| 1) பாடுமீன் | விளையாட்டுக் கழகம் | குருநகர் |
| 2) விநாயகர் | விளையாட்டுக் கழகம் | அளவெட்டி |
| 3) சென் அன்ரனிஸ் | விளையாட்டுக் கழகம் | பாஷையூர் |
| 4) ஞானமுருகன் | விளையாட்டுக் கழகம் | மயிலங்காடு |
| 5) சென். மேரிஸ் | விளையாட்டுக் கழகம் | நாவாந்துறை |
| 6) ஸ்கந்தா ஐக்கிய | விளையாட்டுக் கழகம் | சுன்னாகம் |
| 7) றோயல் | விளையாட்டுக் கழகம் | ஊரெழு |
| 8) யங்கென்றிஸ் | விளையாட்டுக் கழகம் | இளவாலை |
| 9) அம்பாள் | விளையாட்டுக் கழகம் | புங்குடுதீவு |
| 10) அரியாலை ஐக்கிய | விளையாட்டுக் கழகம் | அரியாலை |
| 11) திருமலை நட்சத்திரங்கள் | விளையாட்டுக் கழகம் | யாழ்ப்பாணம் |
| 12) பொற்பதி | விளையாட்டுக் கழகம் | கொக்குவில் |

இப்போட்டிகளுக்கான பிரவேசக் கட்டணம்
100/- 50/- 25/- (10/- பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்)
அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி.

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கமும்
தையல், தட்டச்சு பயிற்சி மாணவர் ஒன்றியமும்
(சி-7315)

"அருள்மொழி இசை அரசு"
பிரம்மஸ்ரீ
சிவ. வை. நித்தியானந்த சர்மாவுக்கு

## பாராட்டு விழா

பாண்டியன் தாழ்வு
ஸ்ரீ நரசிங்க ஞானவைரவர் ஆலயத்தில்



"மகாபாரதம்"
தொடர் சொற்பொழிவு
நிகழ்த்திய
நல்லைக் குருமணியின்
பிரதம சிஷ்யன்
பிரம்மஸ்ரீ
சிவ வை. நித்தியானந்த
சர்மாவுக்கு

இன்று (15-02-94) செவ்வாய் மாலை 6 - 30 மணிக்கு.
— டை தேவஸ்தானம்.

வாழ்த்துவோர்:- புதிய கல்வி நிலையம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(29429)

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 | 15 |
| 06 | 01 |
| 1905 | 1994 |

அமரர்

### திருமதி இராசமணி கணபதிப்பிள்ளை

15 - 01 - 1994 அன்று சிவபதமடைந்த எமது தாயார் திருமதி இராசமணி கணபதிப்பிள்ளை அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

31ஆம் நாளாகிய இன்று அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

திரு. சோ. பத்மநேசன்,
"சோமதீபம்",
கல்வளை வீதி, சண்டிலிப்பாய். (29432)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி எலிசபெத் ஜெயராணி விஜயதாசன்

திருமதி ஜொய்ஸ் அதிசயராணி தவராசா

அநியாய அழிப்பு: 15 - 02 - 1989

அமைதி காக்க வந்த இந்தியப்படையினர் எமது இரு கண்களாகிய அன்புச் சகோதரிகள் இருவரையும் அநியாயமாய் அழித்தார்கள். அவர்கள் பிரிவால் ஆறாத் துயருறும்:

கணவன்மார், பிள்ளைகள்.
சகோதரர், குடும்பங்கள்,
உறவினர்கள்.

யாழ். வீதி,
உடுப்பிட்டி.
(29330)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தான தர்மகர்த்தாசபை

## கேள்விப்பத்திரம் கோரல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கூறுவிலைகள் தொழில் நுட்பம் தெரிந்தவர்களிடம் இருந்து தனித்தனியாகக் கோரப்படுகின்றன.

1. தேரைச் சுத்தம் செய்து வர்ணம் தீட்டுதல் (வேலை செய்வதற்கான கூலிக்கு மட்டும் கூறுவிலை)
   மை கொடுக்கப்படும்
2. புதிதாக ஒரு சகடை செய்தல் (கூறுவிலை தேவையான பொருள்களுக்கும் செய்வதற்கான கூலிக்கும்)

கூறுவிலைகளை வேறு வேறாக 28-02-1994 க்கு முன்னர், திரு. சி. மார்க்கண்டு, முகாமையாளர், சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், மானிப்பாய் என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்புக.

தேவையான மேலதிக விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொண்டு விடயங்களை அறிந்து கொள்க.

செயலாளர்,
தர்மகர்த்தாசபை.
(29440)

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

# 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி,
நல்லூர்.

### நான்காம் நாள் - இன்று

"ஞானம்ஸ் ஹோட்டல்" நிறுவன
ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
வி. எ. ராமையா, ஆர் லோகநாதன் — நாதஸ்வரம்
ஆர். தங்கவேல், கே. மகேந்திரன் — தவில்

**5-00 — 5-10** மிருதங்க இசை
எஸ். காந்தருபன், எஸ். அகிலன்,
எஸ். சிவசங்கர், ஜே. சுதாகரன்.

**5-10 — 5-30** பாட்டு
பி. திசிகேசன், எஸ். தாரணி,
பி. சுபகேசன், எ. ப்ரகாசினி,
பி. சுதர்சினி, கே. இறைவி,
ரி. சுபாஜினி, எஸ். தர்ஷிலா
பி. கோபி, எஸ். நிக்சலா.
ரி. ரேணுகா — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

**5-30 — 5-50** வயலின் இசை
எஸ். திருமாறன், ஜே. றஜிதா, வி. வித்தியாசங்கர், ஜே. ஜெயபாரதி, எஸ். கனிஷியா — வயலின்
எஸ். கமலதாஸன் — மிருதங்கம்

**5-50 — 6-15** பாட்டு
எம். தாணுநாதசர்மா — பாட்டு
எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
நல். கந்தையா - பாட்டு
எஸ். வெங்கடேசசர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திரசர்மா — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
திரு. எஸ். ஞானப்பிரகாசம் (ஞானம்ஸ்)
திரு. எஸ். பரமசாமி (வர்த்தகர்)
திரு. பெஸ்லிபாஸ்கரதேவன்

அருளுரை:
அருட்திரு நீ. மரியசேவியர், (திருமறைக் கலா மன்றம்)

தலைவர்:
கவிஞர் சோ. பத்மநாதன்

பிரதம விருந்தினர்:
அருட்திரு எஸ். ஜே. இமானுவேல் (பிரான்சிஸ் ஸேவியர் குருமடத் தலைவர்)

சிறப்பு விருந்தினர்:
அருட்திரு கரவையூர் செல்வம் அ. ம. தி. (தொடர்பகம்)

**7-30 — 8 30** வில்லிசை
ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்,
கலைமாமணி, எஸ். எஸ். சர்மா வழங்கும்
"கோபால கிருஷ்ண பாரதியார்"

**8-30 — 9-30** பரத நாட்டியம்
மானிப்பாய், கலைக்கோயில் மாணவிகள்
தயாரிப்பு: லீலா செல்வராஜா

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:

### வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்

97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-7321]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பலாத்காரத்துக்கு கட்டியம்

இன்னும் இரண்டு வாரங்களில், கிழக்கிலும் வவுனியா நகரிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. அதற்கான சகல ஆயத்தங்களையும் அரசாங்கம் செய்து வருகிறது. தேர்தலுக்கான நிர்வாக ரீதியான ஆயத்தங்களை மட்டுமன்றி, வாக்குத் தேடும் வேலையையும் அரசு செய்து வருகிறது. அதற்கு தலையாரியாகப் பணிபுரிவது இராணுவத்தினரே.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை என்ன நோக்கத்தோடு அரசு நடத்துகிறது என்பது குறித்து இப்பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தோம்.

கிழக்கில் பிரச்சினை எதுவும் இல்லை. அங்கு வாழும் தமிழர்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் திருப்தியுடன் வாழ்கிறார்கள்; எவ்வித குறைபாடும் இல்லை. கிழக்கில் அரசின் ஆணை செல்லுபடியாகிறது. அப்பகுதி அரசாங்கத்தின் (படையினரின்) கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கிறது. அங்கு தமிழர்களின் விடுதலைப் போராட்டம் (அரசின் வார்த்தையில் பயங்கரவாதம்) நசுக்கப்பட்டு விட்டது. அவர்கள் தனி அரசுக்குப் போராடவில்லை — என்று வெளி உலகத்துக்குக் காட்டுவதே கிழக்கில் தேர்தல் நடத்துவதன் நோக்கம்.

கிழக்கில் இப்போதும் கூட அரச ஆணை செல்லுபடியாகிறது, அரச நிர்வாகம் நடக்கிறது என்று அரசு சொல்வது எதனை? இராணுவ நிர்வாகம் நடக்கிறது என்பதனையே ஆகும். உள்ளூராட்சி சபைத் தேர்தலை வைத்துவிட்டால், அதனை மூடு திரையாகக் கட்டிக் கொண்டு, இராணுவ நிர்வாகத்தை — அடாவடித்தனத்தை — இரும்புச் சப்பாத்தினால் மக்களை, அவர்களின் உரிமைகளை நசுக்கும் நிர்வாகத்தை— தீவிர அடக்குமுறையை — நடத்துவதே அரசாங்கத்தின் நோக்கம். கிழக்கில் இப்போது நடக்கும் இராணுவ ஆட்சிக்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரம் வழங்குவதே தேர்தலின் இலக்கு.

இதனால் தேர்தலை நடத்திக் காட்டுவதில் இராணுவம் அரசாங்கத்தைவிட மிக அக்கறையாக இருப்பதில் வியப்பு எதுவுமில்லை. தேர்தலை எவரும் பகிஷ்கரிக்கக்கூடாது; வாக்களிக்கச் செல்லாதவர்களை பிடித்துச் செல்வோம்; தேர்தல் நாளில் வாக்காளர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்துப் போவோம் என்றெல்லாம் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்றும், ஒலிபெருக்கி மூலமும் தமிழர்களை மிரட்டி வருவதன் ''இரகசியம்'' இதுதான்!

மக்களை நிர்ப்பந்தித்து வாக்களிக்கச் செய்வது ஜனநாயக நெறிமுறைகளுக்கு முரணானது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மக்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் வாக்கைப் பயன்படுத்தும் போதே, அதற்கு மதிப்பு உண்டு. வன்முறையைப் பாவித்தும், பலாத்காரம் புரிந்தும், கட்டாயப்படுத்தியும் மக்களை வாக்களிக்க நிர்ப்பந்திப்பது உண்மையான தேர்தலும் இல்லை. ஜனநாயகமும் இல்லை.

தேர்தல், வன்முறை நிறைந்ததாகவும், தில்லுமுல்லும் ஊழலும் மலிந்ததாகவும் இருக்கும் என்பதை அரசு பகிரங்கப்படுத்தியுள்ளது வாக்களிப்புக்கு நிர்ப்பந்தம் செய்யப்படுவது ஒலிபெருக்கி அறிவிப்புகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது: எனவே பலாத்காரமான தேர்தல் ஒன்று கிழக்கில் நடைபெறப் போகிறது என்பதற்குக் கட்டியம் கூறப்பட்டுள்ளது.

மக்களைக் கட்டாயப்படுத்தியும், நிர்ப்பந்தித்தும் தேர்தலை நடத்திவிட்டு ஜனநாயகம் பேணப்படுவதாக அரசு காட்டப் போகிறது.

எது எப்படியானாலும், கிழக்கில் தேர்தல் நடந்தால் அது தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒரு வகையில் மழுங்கடித்ததாகவே முடியும். அதனாலேயே அரசு இந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தலைகீழாக நிற்கிறது!

# சமாதானம் கூடைக்குள் எடுத்து வந்து கொடுக்கும் ஒரு பொருள் அல்ல

## அனைவரும் சேர்ந்தே அதனைக் காணவேண்டும்

### உதயனுக்கு அளித்த விசேஷ பேட்டியில் பேராயர் கெனத்

சமாதானம் கூடைக்குள் போட்டு எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கும் ஒரு பொருள் அல்ல. அனைவரும் சேர்ந்தே சமாதானத்தைக் காண வேண்டும்.

அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ நேற்று உதயனுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் வந்த போது, இனப்பிரச்சினைக்கு தீர்வு வருமா என்று கேட்டதற்கு ''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் தெரிவுக்குழுவின் அறிக்கை வெளிவரும் வரை பொறுத்து இருங்கள்'' என்று கூறினீர்கள். இப்போது அந்த அறிக்கை வெளிவந்து விட்டது. தீர்வு வந்ததாக காணவில்லையே.

ஆயர்: (தெரிவுக்குழுவின் அறிக்கையை வாசித்தீர்களா என்று கேட்ட ஆயர் அந்த அறிக்கையின் மூன்று சிபார்சுகளை வாசித்தார்.)

முதலாவது சிபார்சு:

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்துவது.

இரண்டாவது சிபார்சு:-

இந்திய அரசமைப்பின் கீழ் அங்குள்ள மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு பாணியிலான திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது.

மூன்றாவது சிபார்சு

பொதுவான பட்டியலுக்கு கூடுதல் விஷயங்களை கையளிப்பது அல்லது பட்டியலை கைவிடுவது.

இச்சிபார்சுகள் தமிழர் அபிலாஷைகளைபூரணமாக நிறைவேற்றுவதாக இல்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இச் சிபார்சுகள் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நல்லதொரு அடிப்படையாகும்.

கேள்வி: வடக்கு-கிழக்கு இணைப்பு விஷயம் பற்றி அதில் தெரிவிக்கப்படவில்லையே. இரு மாகாணங்களின் இணைப்பு முக்கியமானதாக இருந்து வருகிறது அல்லவா?

ஆயர்: அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்தேன். அங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்தேன். அவர்கள் இணைப்பை விரும்பவில்லை. கல்முனையில் முஸ்லிம்களைச் சந்தித்தேன். அவர்களும் இணைப்பை விரும்பவில்லை.

கேள்வி: கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததற்குக் காரணம் அரசாங்கம் திட்டமிட்டு நடத்திய சிங்களக் குடியேற்றங்கள் என்பது வெள்ளிடை மலை அல்லவா?

ஆயர்: ஆம். நான் அதனை ஏற்றுக் கொள்கின்றேன். என்றாலும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பழமையான சிங்களக் கிராமங்கள் உள்ளன வல்லவா!

கேள்வி: அப்படியானால் இருமாகாணங்களின் இணைப்புப் பிரச்சினை குறித்து எப்படி தீர்வு காணப்பட முடியும்?

ஆயர்: கிழக்கு மகாணத்தில் இருந்து சில பகுதிகளை வடக்குடன் சேர்த்து என்ற மாதிரியும் அமையலாம்.

எந்த ஆண்டில் இருந்து கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரத்தைக் கணக்கில் எடுப்பது போன்றதெல்லாம் அதிகாரிகள் மற்றும் அறிஞர் மட்டத்தில் நடத்தும் பேச்சுக்களின் போது தான் வெளிவரும். அப்படியான அறிவு ஜீவிகள் குழுவினர் இங்கு வந்து பேச்சுக்களை நடத்துவதை ஊக்குவிக்க வேண்டும்.

காழ்ப்புணர்ச்சியின்றிஅறிவு ஜீவிகள் நிலையிலான பேச்சுகள் இருதரப்பிலும் நடைபெறும் வாய்ப்பு ஏற்படும் போது இது போன்ற விஷயங்கள் ஆழமாக ஆராயப்பட்டு முடிவு காணக் கூடியதாக இருக்கும்.

கேள்வி: இனப் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கு இப்போதைய தேவை என்ன?

ஆயர்: சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே நல்லெண்ணத்தையும் தகவல் தொடர்பு பரிமாற்றத்தையும் ஊக்குவிப்பதே இன்றைய தேவையாக உள்ளது. இரு சமூகங்களிலும் தற்போது நிலவும் எவ்வகையான தீய எண்ணங்களும் தோற்கடிக்கப்படவேண்டும்.

கேள்வி: சமாதானம் விரைவில் வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதா?

ஆயர்: சமாதானம் கூடைக்குள் போட்டு, எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கும் ஒரு பொருள் அல்ல. அனைவரும் சேர்ந்தே சமாதானத்தைக் காணவேண்டும். சமாதானத்தைக் கொண்டு வருபவர்கள் பாக்கியவான்கள் என்று பைபிளில் கூறப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலை சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு உகந்ததாக உள்ளது.

கேள்வி: தங்களின் தற்போதைய விஜயத்தின் நோக்கம் என்ன?

ஆயர்: நல்லெண்ணம். இருதரப்பினர் மத்தியிலும் ஏற்பட முட்டுக்கட்டையாக இருப்பவற்றை அகற்றுவது தான்.

கேள்வி: கண்மூடித்தனமான முறையில் யாழ். குடாவில் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடக்கின்றன. இதற்கு முடிவு ஏற்படாதா?

ஆயர்: கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவது எனக்கு ஆழ்ந்த கவலையைத் தந்துள்ளது. ஷெல்லுக்கு இலக்குக் கிடையாது. அதற்கு எதிரி யார் நண்பன் யார் என்று தெரியாது. இது பற்றி நான் கொழும்பு திரும்பியதும் உரியவர்களுடன் பேசுவேன்.

கேள்வி: கொழும்பு திரும்பியதும் நீங்கள் ஜனாதிபதிக்கு விவரமான அறிக்கை சமர்ப்பிக்கும் எண்ணம் உண்டா?

ஆயர்: நான் இதற்குப் பதிலளிக்க விரும்பவில்லை. ஜனாதிபதியின் அனுமதி பெற்றுதான் இங்கு வந்துள்ளேன்.

கேள்வி: ஜனாதிபதி விஜேதுங்கவின் பேச்சு, இனவாதமாக அமைந்துள்ளது. நேரத்துக்கு ஒரு மாதிரி பேசுகிறார். இன்னும் ஆறு மாதங்களில் யுத்தத்துக்கு முடிவுகட்டப் போவதாக அவர் கண்டியில் பேசினார் என்று இன்று வானொலி தெரிவித்தது.

ஆயர்: ஜனாதிபதியின் பேச்சில் முரண்பாடு தெரிகிறது. தென் பகுதிக்கு ஏற்றதாகவும் பேச்சு அமைகிறது போல் உள்ளது.

கேள்வி: யாழ். குடா மக்களுக்கு இம்முறை நீங்கள் கூறும் செய்தி யாது?

ஆயர்: சமாதானம் காண்பதற்கான பாதை நீண்ட ஒன்றாகும் இப் பாதையினால் நாம் விரைந்து செல்ல வேண்டும்என்பது எனது அவா. காரணம், வடக்கு-கிழக்கு மக்கள் சமாதானத்தை ஆர்வத்தோடு எதிர்பார்த்துள்ளார்கள். ★

யாழ். மாவட்ட

# மாணவரின் கல்வி நிலை 70 வீதத்தால் வீழ்ச்சி

### கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் எழுபது வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த வருட இறுதியில் பாடசாலைகளில் நடைபெற்ற வகுப்பேற்ற பொதுப் பரீட்சையின் போது எடுக்கப்பட்ட கணிப்பீடு ஒன்றில் இது கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலயம்-ஒன்றின் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இத்தகவலை தெரிவித்தார்.

மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாது — அதில் அக்கறை காட்டாமல் — தனியார் கல்வி நிலையங்களுக்கு அலைந்து திரிவதே இந்நிலைக்கு காரணமாகும் என்று கல்விப்பணிப்பாளர் சுட்டிக் காட்டினார்.

பாடசாலைகளில் பின்தங்கிய நிலையில் இருக்கும் மாணவர்கள் தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்றால் முன்னுக்கு வரலாம் என்ற நோக்குடன் அங்கு படை எடுக்கிறார்கள். ஆனால் அங்கு அவ்வாறு நடப்பதில்லை. திறமையான மாணவர்களே அங்கும் நன்றாக கவனிக்கப்படுகிறார்கள்.

மாணவர்களின் பின் தங்கிய இந்த நிலைமையை மாற்ற பெற்றோர்கள் தான், ஊக்கம் எடுக்க வேண்டும். அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்— இவ்வாறு கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்கள் கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களிலே மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுக் கூறினார்.

(ஒ-162)

## கற்பூரம் விலை வீழ்ச்சி

கோப்பாய், பெப்.15

பைக்கெட் 30 ரூபா வரை விற்கப்பட்டு வந்த கற்பூரத்தின் விலை சமீப நாட்களாக 8-00 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ-78)

## பேச்சுப் போட்டி

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விவேகானந்தர் சிக்காகோ நினைவுப் பேருரைப் பேச்சுப் போட்டிகள் யாவும் இந்து மகளிர் கல்லூரியில் நாளை 16ஆம்திகதிகாலை8 30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும், சகல பாடசாலைகளின் அதிபர்களையும் தங்கள்மாணவர்களை அனுப்பி வைக்குமாறும் நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார். (க)

## அவதார தினம்

யாழ்ப்பாணம், பெப். 15

ஏழாலை தெற்கு வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில், நாளை புதன்கிழமை, வசந்தகுமாரி அம்மன் அன்னையின் அவதார தினம் கொண்டாடப் படவுள்ளது.

அவதார தினத்தையொட்டி ஆலயத் தொண்டில் ஈடுபட்டுவரும் எட்டு பேருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும். (அ)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ் பொது வைத்திய சாலையில் அமைய ஆண், பெண் சுத்திகரிப்பு தொழிலாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த 2,200 பேரில் நேர்முகப் பரீட்சைக்கு 132 பேர் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(உ-15)

சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிறதலைவர்களிடம் இருந்து வரும் சமாதான யோசனையை நாம் ஏற்பதற்கு இல்லை. நாம் முன் வைத்திருக்கும் சமாதானத் திட்டத்திற்கு பிரபாகரன் ஏன் அமைதிகாத்து வருகின்றார்?''— என்றும் பேரணியில் பேசுகையில் பிரதமர் கேட்டார்.

பதினான்கு மாதங்களாக நடைபெற்று வந்த சமாதான பேச்சுவார்த்தை தோல்விகண்டதால், எதிர்காலச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் திரு. பிரபாகரனே நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும் என்பது அனைத்து அரசியல் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கிறது—என்றும் பிரதமர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் விடுதலைப் புலிகள் கலந்து கொண்டு தங்களின் செல்வாக்கை நிரூபித்த பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரலாம் — என்றும் பிரதமர் சொன்னார்.

இதேவேளை — விடுதலைப் புலிகளிடம் இருந்து வரும் சமாதான முயற்சிகள் சமாதானசைகைகள் ஏதும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனிடம் இருந்துதான் வரவேண்டும் என்று பிரதமர் கூறியிருப்பது இருதரப்பினருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை என்பது துளியும் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது—என்று பி. பி. ஸி செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

(அ-எ-6)

## ஆமை மீது தீச்சுடர்; மூதாட்டிக்கு வினையானது!

யாழ்ப்பாணம், பெப். 1

வீட்டு முற்றத்தில் தீச்சுடர் ஒன்று நகர்ந்து வருவதைக் கண்டு பேய் எனச் சொல்லி, அதற்கு அஞ்சி அலறிய வண்ணம் அதிர்ச்சியால் மூர்ச்சித்த வயோதிபப் பெண் 13 நாட்கள் சுயநினைவிழந்த நிலையில் கிடந்தபின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இரவு நேரத்தில், கும்மிருட்டு வேளையில், சிறுவர்கள் சிலர் ஆமை ஒன்றின் ஓட்டின் மீது மெழுகுதிரியைக் கொளுத்தி வைத்து, அருகே மரணமான பெண்ணின் வீட்டு முற்றத்தில் விட்டனர் என்றும் —

அதனைக் கண்ட அந்தப் பெண் நகரும் தீச்சுடரைப் பேயென நினைத்து அஞ்சி அறிவிழந்து விழுந்தார் என்றும் — சொல்லப்படுகிறது.

சிறுவர்களின் விளையாட்டு வினையாகியதால் காலமானவர் கந்தையா செல்லம்மா என்ற 78 வயது மூதாட்டி ஆவார். இவர் உடுவில் வடக்கு, டச்சு வீதியைச் சேர்ந்தவர்.

இறந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணம் என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். மரண விசாரணையின் பின்னர் தீர்ப்பு வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டது.

(அ-15-13)

## இன்று

யாழ். மாவட்டப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ் அரச அதிபர் செயலகத்தில் நடைபெறும். சகல ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்களும் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(உ-162)

★ ★ ★

வேலணை - ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த — ஆண்டு 6 இற்கு மேற்பட்ட வகுப்புகளைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். சென் ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும்

## ஆலயங்களில்

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயம், பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில், அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில ஆகியவற்றின் மாசி மக இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூர்த்தியடையும்.

(உ-க-89)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள்கோயிலில் மாசி மக இலட்சார்ச்சனை நாளை 16 ஆம் திகதி ஆரம்பித்து 25 ஆம் திகதி முடிவடையும். (க)

## நாளை

யாழ்ப்பாணம், பெப். 15

அறவழிப் பொது நூலகத்தின் நாலாற்சழி இளை திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது கைதடி சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதி டாக்டர். ஜீ பவானி அதை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைப்பார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கைதடி பிரதேசப் பொறுப்பாளர் திரு. குமரன் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (க)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான — சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சர்வமத மாநாட்டு உரை தொடர்பான — பேச்சுப் போட்டிகள் நாளை பிற்பகல் 2.00 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (உ)

## கல்விப் பகுதிக்கு மற்றும் ஓர் ''ஓட்டோ''

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு மேலும் ஓர் ''ஓட்டோ'' வாகனத்தை தருவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

தற்போது உள்ள ஓர் ஓட்டோவின் மூலம் யாழ் கல்வித் திணைக்களத்தின் இரண்டு வலயங்களின் அலுவல்களையும் கவனிக்க முடியாதுள்ளதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புதிய ஓட்டோவை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்குவதில் உள்ள தாமதத்தை நிவர்த்தி செய்து அதனை எடுத்து வரும் முயற்சிகளில் தற்போது கொழும்பு சென்றுள்ள கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி ஈடுபடுவார் என தெரியவருகிறது. (இ-162)

# அரசுக்கு மனத்திடம் வந்தாலே பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்

### செய்தியாளர் மாநாட்டில் வாசுதேவ

யாழ்ப்பாணம், பெப். 15

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற மனத்திடம் அரசுக்கு ஏற்படும் வரை முடிவு ஏதும் ஏற்படாது; வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்காது அரசு யாருடன் பேச்சு நடத்தியும் பயனில்லை.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

இனச்சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறி அரசு 10 வருடங்களாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண விரும்பினால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன் வைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு, மேலதிக அதிகாரங்கள் உள்ளிட்ட யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

இன்று தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை கிளர்ச்சி கொள்ளவைக்கும் உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. தமிழ் மக்களுக்கு எதிரான இனத்துவேசம் கொண்ட தலைவர்கள் ஒன்று சேர்கிறார்கள்— என்றார்.

[ஒ 3]

# கிழக்குப் பகுதியில் தமிழரை முனாஸ் குழு படுகொலை!

### மக்கள் நடமாடுவதற்கு அச்சம்

முனாஸ் என்ற பெயரிலான குழு ஒன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களை படுகொலை செய்வதிலும், கண்ட இடத்தில் சித்திரவதை செய்வதிலும் ஈடுபட்டுவருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் கூடுதல் எண்ணிக்கையில் முஸ்லிம்களும் மற்றும் தேசத்துரோகிகளும் இடம்பெற்றுள்ளனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக் குழுவினைச் சேர்ந்தவர்கள் இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் இருந்தே வருவதாகவும்—

துப்பாக்கிகளையும், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களையும் அவர்கள் தம் வசம் வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் [illegible] உள்ள வேளைகளில் வாகரைப் பகுதிகளில் [illegible] வர அஞ்சுகின்றனர்.

இதேவேளை— மட்டக்களப்பின் சில இடங்களில் இரவு வேளைகளில் தமிழர்களின் வீடுகளின் அருகிலும் பற்றைகளிலும் பரவலாக இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் பதுங்கி இருப்பதுடன் வீடுகளுக்குள் நுழைந்து மக்களை அடிக்கடி மிரட்டியும் வருகின்றனர். தாம் தூங்கும்போது [illegible] இருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஓ-எ)

உரம் இல்லை என்று சொல்லாதே - இயற்கை உரம் உன் காலடியில் மறவாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

அனுபவமும், திறமையுள்ள ''Bar Keeper Cum Steward'' பதவிக்கு வெற்றிடம் உண்டு. விண்ணப்பிப்பவர்கள் நேரில் காலை 10 மணிக்கும் பிற்பகல் 4-30 மணிக்கும் இடையில் கல்வி அனுபவ சான்றிதழ்களுடன் 15 - 02 - 1994, 16 - 02 - 1994 ஆகிய திகதிகளில் நேரில் வரவும். அனுபவமும், திறமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

**ஹோட்டல் ஞானம்ஸ்,**
299, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-7337]

---

**லயன் ட. ரேமன் முத்தையா**
(District Chairman Leos)
அவர்களின்
ஞாபகார்த்தமாக
யாழ். பரியோவான் கல்லூரி லியோ கழகம்
நடத்தும்

## இரசிகர்களின் அபிமான கிரிக்கட் நட்சத்திர தெரிவுப் போட்டி-1994

கிரிக்கட் இரசிகர்களே!

உங்களின் அபிமான கிரிக்கட் நட்சத்திரம் யார்?
தெரிவு உங்கள் கைகளில்!
நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவு தான்

★ உங்கள் பாடசாலைகளில் விண்ணப்பப் படிவங்களை வாங்குங்கள்
★ போட்டி விதிமுறைகளுக்கு அமைய அவற்றைப் பூர்த்தி செய்யுங்கள்
★ உங்கள் பாடசாலைகளில் உள்ள பெட்டிகளில் அவற்றைப் போடுங்கள்

உங்களால் தெரிவு செய்யப்படும் 3 அபிமான வீரர்களுக்கும்; அவர்களைச் சரியான முறையில் தெரிவு செய்யும் உங்களில் மூவருக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அவ்வாரத்திற்கான முடிவுகள் உதயன் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

முடிவு திகதி: **08 - 04 - 1994**

— பரியோவான் கல்லூரி லியோக் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:
**LINGAM COOL BAR,**
52, CLOCK TOWER ROAD.
JAFFNA.

[சி-7336]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்**
(உரிமையாளர், கலைவாணி நகைமாளிகை,
111 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: **27 - 12 - 1936** மறைவு: **16 - 01 - 1994**

16 - 01 - 1994 இல் அமரத்துவமடைந்த அமரர் நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் அவர்களின் மனைவி, மக்கள், துயருற்று இருந்த வேளையில் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியதுடன் பல வழிகளிலும் உதவி புரிந்தும், மலர் வளையங்கள் சமர்ப்பித்தும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர்கள், யாழ் வர்த்தகர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் அன்னாரது இல்லத்தில் இன்று நடைபெறுகிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
அன்புப் பேரன்

136/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[29443]

---

## எமது புதிய வெளியீடுகள்

✻ **ஒப்பரேசன் தவளை**
(முழுநீள பூநகரிச்சமர்)
கமலின
✻ **மகாநதி**
பிரசாந்தின்
✻ **திருடா திருடா**
(ஒறிஜினல் - FULL SCREEN)

மற்றும் மம்மி டாடி,
வாங்க பார்ட்னர் வாங்க, சிந்து நதி பூ

**வீடியோ விமல்,**
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்

(29446)

---

## உதவி ஆசிரியர் தேவை

தமிழீழத்திலிருந்து வெளிவரும் முன்னணிச் சஞ்சிகையான உலக உலாவிற்கு உதவியாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. தமிழ்மொழியறிவு
2. ஆங்கில மொழியறிவு
3. உலகளாவிய பொது அறிவு
4. பத்திரிகைத்துறை அனுபவம்

மேற்குறிப்பிட்ட தகைமைகளை உடையோர் **20 - 02 - 1994**க்கு முன்னர் உங்கள் விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உலக உலா
144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

★ சம்பளம் நேர்முகம் காணலின்போது பேசித் தீர்க்கப்படும்.

(சி-7335)

---

## சகல வீடியோ நாடா விநியோகஸ்தர் ஞாபகம்

1) **முதல் பாடல்**
2) **உள்ளே வெளியே**

மேற்படி இரண்டு தமிழ்ப் படங்களும், கலை பண்பாட்டுக் கழகத்தினரால் உருவாக்கப்பட்ட தணிக்கை சபையினால், தடை செய்யப்பட்டுள்ளது என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

தலைவர்
**கலை ஊடக இணையம்,**
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-7240)

---

### யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும்
## முக்கிய அறிவித்தல்

யாழ்நகர் உதவி அரசாங்க பிரிவிற்குட்பட்ட வர்த்தகர்கள் அனைவரும், தங்கள் வர்த்தக நிலையங்களில் தற்சமயம் பாவிக்கப்படும் வியாபார விளம்பரப் பலகைகளை எல்லாம் தூய தமிழில் எழுதவேண்டும். ஆங்கில வார்த்தையை நேரடியாக தமிழில் எழுவது தவிர்க்கப்படவேண்டும். ஒரு குறுகிய காலத்தில் நடைமுறைக்கு கொண்டுவர இருப்பதால் இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை அறிவதற்கு உரிமையாளர்களை எமது சங்கப் பணிமனையுடன் உடனே தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

பொதுச் செயலாளர்

யாழ். வர்த்தகர் சங்கம்,
21, நவீன சந்தை, மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(சி/7242)

---

நீண்ட இடைவெளியின் பின்
வட்டுக்கோட்டையில்

**யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்ற**
ஆதரவில்
**யாழ். பல்கலைக்கழக நாட்டார் வழக்கியற் கழகம்**
வழங்கும்

## சத்தியவான் சாவித்திரி

(புராண இசை நாடகம்)

தயாரிப்பு, நெறியாள்கை:-
பேராசிரியர் இ பாலசுந்தரம்

இடம் :- யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபம்
காலம் :- 16 - 02 - 94 புதன் பி. ப 4 00 மணி

அன்பளிப்பு: **20/-**
மாணவர்களுக்கு: **10/-**

விளம்பர அன்பளிப்பு:
**சத்தியா ஹாட்வெயார் ஸ்ரோஸ்**
ஆஸ்பத்திரியடி, [illegible]
(சி/7341)

---

## இசை விழா நிகழ்ச்சிகள்

இளங்கலைஞர் மன்ற இசை விழாவின் நான்காம் நாளான இன்று திரு. எம். தாணுநாத சர்மா, திரு. நல். கந்தையா ஆகியோரின் பாட்டும், ''கோபால கிருஷ்ண பாரதியார் எனும் பொருளிலான ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லிசையும், மானிப்பாய் கலைக்கோயில் மாணவிகளின் பரதநாட்டியமும் நடைபெறும்.

இன்றைய விழாவிற்கு கவிஞர் சோ. பத்மநாதன் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக அருட்திரு எஸ் ஜே. இமானுவேலும் சிறப்புவிருந்தினராக அருட்திரு. கரவையூர் செல்வமும் கலந்து கொள்வார்கள். (க-111)

## நூல் அறிமுக விழா

வித்துவான் வ. செல்லையா எழுதிய ''இறைநாம அர்ச்சனை'' எனும் நூலின் அறிமுக விழா இன்று செவ்வாய் மாலை 4.30 மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி காளி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும். (க)

---

பருத்தித்துறையில்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிரகாரம் ஷெல் மற்றும், விமானத் தாக்குதல்களை அப்பகுதியில் மேற்கொள்ளாமல் தவிர்க்க வேண்டும்.

✶ இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்கள் பாதிக்கப்படாத வகையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

''இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது பொது மக்களை பாதிக்காத வகையில் அவர்களுக்கு முன் அறிவிப்பு இனி விடுக்கப்படும்' — என வடபிராந்தியத் தளபதி கூறியதாக திரு. செற்றிக் பிரலா தெரிவித்தார்.

திரு. பிரலா காரைநகர் கடற்படை முகாமுக்கும் சென்று கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

---

## விக்னா
**கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 94**
**துரித மீட்டல்**
ஆரம்பம்
**17 - 02 - 94**
வியா. 4 45 P.m.
கணக்கியல்
திரு. S. K பிரபாகரன்
B. B. A
உடன் அனுமதிகளைப் பெறவும்.

சி/723 7

---

## மரண அறிவித்தல்

### சின்னையா இராசமாணிக்கம்

சின்னையா இராசமாணிக்கம் 14 - 2 - 94 இல் காலமானார். இவர் கலால் பகுதி இளைப்பாறிய சார்ஜனும், சங்குவேலி கரிப்பிட்டியார் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும், மாசிலாமணியின் அன்புக் கணவரும், கிருஷ்ணானந்ததேவி, ஜெயகோபால் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைசிங்கம், இரத்தினேஸ்வரன், தவராசா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பூதத்தம்பியின் (தபால் திணைக்களம்), மாமனாரும், மதிசுதன் (தயாளன் ஜேர்மனி), துளசி, கெங்காசுதன் (குட்டி-ஜேர்மனி), பூங்குழலி (பூமா), கந்தையா (ஜேர்மனி), சின்னையா (ஜேர்மனி), வசந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15 - 2 - 94) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகச் சங்குவேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பூ. கிருஷ்ணானந்ததேவி
(மகள்)

டச் றோட்,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (29451)

---

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI

## நேர்முகப் பரீட்சை

எமது விளம்பரத்திற்கு அமைய விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் எமது வளாகத்தில் நடைபெறும். இதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் இந் நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

விண்ணப்பிக்கத் தவறியவர்கள் விண்ணப்பப் பத்திரத்துடன் 17ஆம், 18ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

(சி/7340)

---

## இலவச 'பாமசி' வகுப்பு ஆரம்பம்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் ''பாமசி'' வகுப்புக்கு தெரிவானவர்கள் மட்டும் எமது பணிமனைக்கு 1994 - 02 - 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமுகம் கொடுக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1994 - 02 - 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் ''பாமசி'' வகுப்புக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளதென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி
யாழ் ஆங்கில மருந்து
வர்த்தகர் சங்கம்.

மு. பத்மநாதன்
(செயலாளர்)

(சி/7241)

---

## இதய அஞ்சலி



**நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்**
உரிமையாளர்
(கலைவாணி நகைமாளிகை)

எனது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு அயராது ஆக்கமும், ஊக்கமும் தந்து என்னை வழிகாட்டிய அன்பு மாமாவுக்கு எனது இதயபூர்வமான அஞ்சலியை செலுத்துகிறேன். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல ஆண்டிக்கேணி ஐயனாரை வேண்டுகிறேன்,

மு. கிருபாலன் (மருமகன்)
(கிருபா நகைமாளிகை)

(சி/7239)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மீனாட்சி தம்பு

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மீனாட்சி தம்பு காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கா. தம்பு அவர்களின் மனைவியும், அம்பிகைராஜா (இளைப்பாறிய பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர், யாழ்ப்பாணம்), வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை) ஆகியோரின் தாயாரும், விமலாதேவி, பொன்மயிலாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும், யசோதரன், சுபோதினி, மீனாகுமாரி, பிருந்தா, நிரஞ்சலா, அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணிக்கு உரும்பிராய் வடக்கு திருவீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. அம்பிகைராஜா
(மகன்)

திருவீதி,
உரும்பிராய் வடக்கு.

(29445)

### இராமலிங்கம் வீரசிங்கம்

சாந்தை, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்டவரும், மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயம், முத்துக்குமாரசாமி ஆலயம் ஆகியவற்றின் பிரதான பூமாலை கட்டுபவருமாகிய இராமலிங்கம் வீரசிங்கம் 14 - 2 - 94 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி இராஜேஸ்வரி, இராசலிங்கம், திருமதி பத்மாவதி, நாகராசா, திருமதி நாகரத்தினம், சோமசுந்தரம், நாகேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. நடராசா, த. சின்னத்துரை, சி. சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15-2-94 காலை 9 மணிக்கு சம்பில்துறை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ. இராசலிங்கம்
வீ. நாகராசா
(மகன்மார்)

பிள்ளையார் கோயிலடி,
மூளாய்.

(29444)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org